BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் பகுதி விவாசாயிகள் சந்தை இந்தக் கோடைப்பருவத்தில் புதிய ஒரு இடத்திற்கு திரும்பவும் வருகிறது.

ப்ராம்ப்ட்டன், ON (மே 28, 2021) – ப்ராம்ப்ட்டன் நகர விவசாயிகளுக்கான சந்தை, 2021 ஆண்டின் இந்தப் பருவத்தில் புதிய புறநகர் பகுதியில் ஜூன் 19 ஆம் தேதி திரும்பவும் வருகிறது.

சந்தைப் பருவத்தின்போது புறநகர்ப் பகுதியின் மறு அபிவிருத்தியை எதிர்நோக்கி, கென் வில்லான்ஸ் சதுக்கம், வெலிங்டன் ஸ்ட்ரீட் வெஸ்ட் மற்றும் கேஜ் பார்க் ஆகியஇடங்களுக்கு இந்த சந்தை இடமாற்றம் செய்யப்படுகிறது. இந்த சந்தையானது சனிக்கிழமைகளில், காலை 8 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை, மழையோ வெய்யிலோ எதுவானாலும் அக்டோபர் 23 வரை நடக்கும். தங்களுக்கு விருப்பமான விவசாயிகள் மற்றும் உள்ளூர் கைவினைஞர்கள் பலரும் புதிதாக பறித்து வரப்பட்ட பருவகால விளைபொருட்களை கொண்டுவருவார்கள்; இதில் உண்பதற்கு தயாராக உள்ள பொருட்கள் மற்றும் தனித்துவமான கைவினைப் பொருட்களும் அடங்கும்!

**கோவிட்-19 சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்**

COVID-19 இன் பேரிலான பீல் பகுதி மற்றும் மாகாணத்தின் பொது சுகாதார உத்தரவுகள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி, சந்தை செயல்படுவதை நகர ஊழியர்கள் உறுதி செய்வார்கள். சந்தைக்கு வரும் அனைத்து சில்லறை வியாபாரிகளும் கடைக்காரர்களும் முகக் கவசம் அணிய வேண்டும். சமூக இடைவெளிவிடவேண்டும் மற்றும் கடைக்குள் இருக்கும் நபர்களின் எண்ணிக்கையும் கட்டுப்படுத்தப்படும்.

**சந்தைக்கு செல்வது எப்படி**

இந்த சந்தையானது இப்போது ப்ராம்ப்ட்டன் புறநகர்ப் பகுதியின் மையத்தில்தான் உள்ளது மற்றும் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்தை உபயோகித்து அடையலாம் அல்லது சைக்கிளிலேயே சென்றடையலாம். வாகனங்களில் செல்வோருக்கு கட்டணமில்லா வாகன நிறுத்தும் வசதி உள்ளது, இது ப்ராம்ப்ட்டன் சிட்டி ஹால்-இல் இருக்கிறது.

**அனுசரணை அளிப்பவர்கள்**

2021 ஆம் ஆண்டிற்கான ப்ராம்ப்ட்டன் உழவர் சந்தையானது, மெரிடியன் கடன் சங்கத்தால் (Meridian Credit Union) வழங்கப்படுகிறது. ப்ராம்ப்ட்டன் உழவர் சந்தையின் பெருநிறுவன அனுசரணையாளர்கள்:

அல்கோமா பல்கலைக்கழகம், ஆல்ஸ்டேட் (Allstate ) மற்றும் ஸ்பிரிட் ஆஃப் மேத் பிராம்ப்டன் (Spirit of Math Brampton).

இந்த ஆண்டின் இந்த சந்தை குறித்த புதுப்பித்த தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/markets

**அறிஞர் கூற்றுக்கள்**

“ப்ராம்ப்ட்டன் உழவர் சந்தையில் கலந்துகொள்வது என்பது 1986 ஆம் ஆண்டிலிருந்தே, ப்ராம்ப்ட்டன் குடும்பங்களுக்கு ஒரு பாரம்பரிய நிகழ்வாக இருந்து வருகிறது, மேலும் ஒவ்வொரு சனிக்கிழமை காலையிலும் நானும் இதைச் செய்து அனுபவிக்கிறேன். இப்போது இது ஒரு புதிய இருப்பிடத்தில் அமைந்திருப்பதால், எங்களுக்கு பிடித்தமான பல விவசாயிகளும் கைவினைஞர்களும் இங்கு வந்து கூடும் வகையில் அதே சிறந்த சந்தையாகவும் இது இருக்கும்! நமது சந்தைக்கு தேடிவந்து ஆதரவளிக்குமாறு உள்ளூர் மக்களை நான் ஊக்குவிக்கிறேன். ”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் நகரம் COVID-19 தொற்றுநோயிலிருந்து மீண்டுவரத் துவங்குகையில், ப்ராம்ப்ட்டன் உழவர் சந்தையானது குடியிருப்பாளர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் அது ஒரு உள்ளூர் சுற்றுலா அம்சமாக இருக்கும்; அதனைப் பார்வையிடவும் உள்ளூர் விற்பனையாளர்களை ஆதரிக்கவும் இது ஒரு நல்ல வாய்ப்பை வழங்குகிறது! ”

- *ஹர்கிரத் சிங், கவுன்சிலர், வார்டுகள் 9 & 10; தலைவர், பெருநிறுவன சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் உழவர் சந்தையை புதிய இடத்திற்குகொண்டு செல்வது என்பது, புதுமை படைக்கும் வகையிலான மாவட்டத்தை வலுப்படுத்த புறநகர்ப் பகுதியில் மீண்டும் அபிவிருத்தி செய்வதை ஆதரவளிப்பதற்காக ப்ராம்ப்ட்டன் நகரத்தை பழுதுபார்ப்பதை மேற்கொள்ளவும் இது உதவும்; அல்கோமா பல்கலைக்கழகம் தன்னை விரிவாக்கம் செய்யும் பணிக்கு உதவுங்கள்; மேலும், ஹூரோன்டாரியோ லைட் ரெயில் போக்குவரத்து வசதியையும் (எல்ஆர்டி) ஆதரியுங்கள். ”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca